



- வாழ்வோம்

நா.நாச்சிமுத்து ; கழகத்தின் தனித்தமிழ்ப் பற்றாளர்!

ஓவியம் : ரவி பேலட்



பகுத்தறிவுடனும் அறிவியல் மனப்பான்மையுடனும் செயல்படத் தொடங்கியபோது, முதல் வேலையாகத் தங்களது தோட்டத்திற்குள் இருந்த கோயிலை அப்புறப்படுத்தியதுடன், பழைமையில் ஊறிக் கிடந்த வேளாண் மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வூட்டும் பணிகளைத் தொடங்கினார். அந்தக் காலகட்டத்தில், அவரது திருமணத்தை எந்த விதச் சடங்கும் இல்லாமல், சீர்திருத்தத் திருமணமாக நடத்திக்காட்டி, அப்பகுதியில் கலகக்காரராக இருந்தவர் நாச்சிமுத்து.

கழகம் தொடங்கியபோதே, தொடக்ககால உறுப்பினராக இணைந்தவர், கழகத்தின் முதல் பொதுக்குழுவில் இடம்பெற்றார். இவரது ஆளுமை, அணுகுமுறை மற்றும் அரசியல் பணிகளைக் கண்டு ஏராளமான இளைஞர்கள் கழகத்தில் இணைந்தனர்.

179 உடன்பிறப்பே

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த நா.நாச்சிமுத்து அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

ஓட்டன்சத்திரம் தொகுதி, இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுதிமிக்க கோட்டை. எத்தனை புயல்கள், சூறாவளிகள் வந்தாலும் கழகத்தின் பக்கம்தான் அந்த மண்ணின் மக்கள் என்பதை தேர்தல் வரலாறு சொல்லும். அந்த வரலாற்றின் தொடக்கத்தில் இருந்த உடன்பிறப்பு, நா.நாச்சிமுத்து. மண்ணின் மக்களோடும் வேளாண்மையோடும், கல்வியோடும் இணைந்து வாழ்ந்த எளிய மனிதர். பெரியார் பற்றாளராக, அண்ணாவுக்குத் தம்பியாக, முத்தமிழறிஞர் கலைஞருடன் தோழமையாக இணைந்து செயல்பட்டவர் என்பதே அவரது அரசியல் வாழ்க்கையின் அடையாளம்.

அன்றைய ஒருங்கிணைந்த மதுரை மாவட்டம், இன்றைய திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டத்தில் உள்ள தேவத்தூர் என்கிற கிராமத்தில் *1927*-ஆம் ஆண்டு ஜூலை *2*-ஆம் தேதி பிறந்தவர். பெற்றோர் நாச்சிமுத்து - பழனியம்மாள். விவசாயக் குடும்பம். பழனி நகராட்சி உயர்நிலைப் பள்ளியிலும், மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும் கல்வி பயின்றவர். உயர்நிலைப் பள்ளியில் படித்த காலத்திலேயே அரசியல் உணர்வுடன் இயங்கத் தொடங்கி யவர். அங்கு மாணவர் பேரவைச் செயலாளராக இருந்தபோது, பொதுவுடைமை இயக்கத் தலைவர்களுள் ஒருவரான தோழர் சங்கரய்யா அவர்களின் தொடர்பு கிடைத்துள்ளது. எனினும் அவரது பிடிப்பு, சுயமரியாதை இயக்கத்தின் பக்கமே இருந்துள்ளது.

இளம் பருவத்திலேயே அவர்களது தோட்டத்திற்கு வேலைக்கு வரும் பெரியார் தொண்டர்கள் வழியாக 'குடிஅரசு', 'பகுத்தறிவு' இதழ்களை வாசிக்கத் தொடங்கியவர், அதன்மூலம் தொடர்புகள் கிடைத்து, பெரியார் பற்றாளர்கள் தாராபுரம் ஆறுமுகம், தேவத்தூர் கோபால்சாமி, கருப்பண்ணன் ஆகியோருடன் இணைந்து செயல்படத் தொடங்குகிறார்.

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படித்தபோதும், தோழர் சங்கரய்யாவுடன் நட்பு நீடித்தது. பொதுவுடைமை இயக்கம் வளர்ந்துகொண்டிருந்த காலத்தில், நாச்சிமுத்து அவர்கள், திராவிடர் கழகத் தோழர்களுடன் இணைந்து செயல்பட்டார். அதன்மூலம் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் தொடர்பு கிடைத்து, இயங்கத் தொடங்கினார்.

1971-லும் கழகத்தின் சார்பில் ஒட்டன் சத்திரம் தொகுதியில் களமிறங்கி, இந்த முறை எதிர்த்துப் போட்டியிட்ட பழனியப்பனை, *13* ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார். *40,845* வாக்குகள் பெற்று, *58.99* சதவிகித வாக்குகளைப் பெற்றிருந்தார்.

சட்டமன்றத்தைத் தாண்டி மக்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். தேவத்தூர் சுற்றுவட்டாரத்தில் உயர்நிலைப் பள்ளி எதுவும் இல்லாததால், அப்பகுதி மக்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு, *1968*-இல் தேவத்தூரில் மணிமேகலை இளங்கோ உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கினார். அந்தப் பள்ளியைத் தந்தை பெரியாரை அழைத்துவந்து, திறந்துவைத் துள்ளார். இன்று அப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாகச் செயலபட்டுவருகிறது.

வேளாண்மையில் அறிவியல்

வேளாண்மையில் அறிவியல் கண்ணோட்டத்தை வளர்த்தவர். அப்பகுதியில் முதன்முதலாக இயந்திரக் கலப்பையால் நிலத்தை உழுது, விவசாய மக்களிடம் காட்சிப்படுத்தினார். நீர் இறைத்திட மின்மோட்டார்களைப் பயன்படுத்தினார். ஒட்டன்சத்திரத்தில் மின்மோட்டார் கடையைத் தொடங்கி, விவசாயிகளிடத்தில் நவீன முறைக்குப் பழக்கப்படுத்தியவர். குறிப்பாக, விவசாயிகள் கிணறுகளை ஆழப்படுத்தியும் புதிய கிணறுகளை வெட்டியும் கடன்பட்ட நேரத்தில், இத்தகையோரை வேறு தொழில்களில் ஈடுபட வழிகாட்டியவர்.

'கிணறு வெட்டிக் கெட்டுப்போகாதே' 'எருமை மாடுகளை நம்பி ஏமாந்து போகாதே' என்பன போன்ற துண்டறிக்கை களையும் சிறு விளக்க அறிக்கைகளையும் அச்சிட்டு, மக்களிடையே பரப்பினார். அதற்காகக் குடிசைத் தொழில்கள் கூட்டுறவு சங்கம், எண்ணெய் வர்த்தகர்கள் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றை நிறுவி, அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் மேம்பட உறுதுணை யாக நின்றவர்.

அவர் சட்டமன்றத்தில் இருந்த காலத்தில், கொங்கு வேளாளர் சமூகத்தின் சமூக நீதி சார்ந்த கோரிக்கைக்கு அழுத்தம் கொடுத்தவர். பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் கொங்கு வேளாளர்களைச் சேர்க்க வேண்டும் எனக் கலைஞரிடத்தில் கோரிக்கையை முன்வைத்தவர்களில் நாச்சிமுத்துவின் பெயரும் குறிப்பிடத்தக்கது.

பாவாணர் நூல்களை விரும்பிப் படிப்பார், பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோரிடத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். இறுதிக் காலங்களில் தனித்தமிழ் ஆர்வலராகத் தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர். *2007*-ஆம் ஆண்டு, அவரது *80*-ஆம் வயது நிறைவு பாராட்டு விழா, கழகத்தின் சார்பில் அன்றைய தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடாவுமான அர.சக்கரபாணி அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி கலந்துகொண்டதுடன், ஏராளமான கழகத்தினர் கலந்துகொண்டு மரியாதைசெய்தனர். *2016*-ஆம் ஆண்டு, வயது முதிர்வு காரணமாக *90* வயதில் அவர் மறைந்தபோது, ஏராளமான கழகத்தினர் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தினர். இன்றும் அவரது நினைவுகளைப் பகுதிக் கழகத்தினர் பெருமையுடன் நினைவுகூர்வர்.

...துடிக்கும்

● நீரை.மகேந்திரன் ●

தேர்தல் களத்தில்

1962 சட்டமன்றத் தேர்தலில், ஒட்டன் சத்திரம் தொகுதியில் கழக வேட்பாளராக முதன்முறையாகப் போட்டியிட்டார் நாச்சிமுத்து. அந்தத் தேர்தலில், காங்கிரஸ் வேட்பாளர் சேனாபதி அவர்களிடம் *6* ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

1967-இல் கழக ஆட்சி அமைந்த தேர்தலில், அதே ஒட்டன்சத்திரம் தொகுதி யில் மீண்டும் களமிறங்கினார். காங்கிரஸ் வேட்பாளர் பழனியப்பனைத் தோற்கடித்து, சட்டமன்றத்திற்குச் சென்றார். அந்தத் தேர்தலில் *55.55* சதவிகித வாக்குகளுடன் வெற்றிபெற்றிருந்தார்.

தேவத்தூர் கிராமத்தில் கிளைக் கழகம் தொடங்கி, கருப்பு சிவப்பு இருவண்ணக் கொடியைப் பறக்கவிட்டார். பேரறிஞர் அண்ணாவுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். பேரறிஞர் அண்ணாவின் பொள்ளாச்சி, பழனி, திண்டுக்கல் பயணங்களில் தவறாது இடம்பெற்றவர் நாச்சிமுத்து. கழகத்தின் அனைத்து போராட்டக் களங்களிலும் பங்குபெற்றவர். *1965* இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஒரு மாதம் சிறைப்பட்டவர்.

தமிழ்நாட்டில், `தாய்மாமன் தடியடி திட்டம்', `வெற்றி மின்வெட்டுத் திட்டம்', `வெற்றி மின் கட்டண உயர்வு', `வெற்றி ஸ்டிக்கர் ஒட்டும் திட்டம்' எனப் பல அறிவிக்கப்படாத திட்டங்கள், கடந்த நான்கு மாதங்களில் நடைமுறைக்கு வந்துள்ளன. அதில் புதிய வரவு, `வெற்றி அரிசி விலை உயர்வுத் திட்டம்'. கடந்த 46 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடந்த நான்கு மாதங்களில் அரிசி விலையேற்றம் விண்ணை முட்டிவருகிறது.

இந்த ஆண்டு தொடக்கத்தில், சுமார் 1,300 ரூபாய் வரை விற்கப்பட்ட 26 கிலோ சன்ன ரக அரிசி மூட்டை, இப்போது 2,000 ரூபாய். ரூ.1,400-க்கு விற்கப்பட்ட டீலக்ஸ் பொன்னி அரிசி, தற்போது 1,800 ரூபாய். ரூ.1,600-க்கு விற்கப்பட்ட பொன்னி அரிசி, 1,950 ரூபாய். இப்படி அனைத்து வகை அரிசியும் விலை அதிகரித்துள்ளது. அடுத்த சில மாதங்களில், ஒரு கிலோ அரிசி 100 ரூபாயைத் தாண்டிவிடும் என்றும் ஆலை உரிமையாளர்கள் எச்சரிக்கின்றனர். தி.மு.கழக ஆட்சியில், கிலோ 55 ரூபாய்க்கு விற்கப்பட்ட அரிசியை இன்று, 80 ரூபாயாக அதிகரிக்கச் செய்து, `மாபெரும் மாற்றத்தைத் தந்திருக்கிறது', இந்தப் புதிய அரசு.

வெற்றி அரிசி விலையேற்றத் திட்டம்!

பருவமழை பொய்த்தது, `எல் நினோ' எனப் பல காரணங்கள் அரிசி விலை ஏற்றத்திற்குக் கூறப்பட்டாலும், அவற்றைக் கையாளத் தெரியாத இந்த அரசின் அலட்சியப்போக்கும் மிக முக்கிய காரணமாக உள்ளது. கர்நாடக மாநிலத்திடம் பேசி, தமிழ்நாட்டின் தண்ணீர் உரிமையை நிலைநாட்ட முடியாத இந்த அரசின் கையாலாகாத்தனமும் விலையேற்றத்திற்கு மிக முக்கிய காரணம்.

விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த, இருப்பை அதிகரித்து விநியோகச் சங்கிலியைச் சீரமைக்கவோ, வெளிச்சந்தையில் வாங்கி மானிய விலையில் விநியோகிக்கவோ, விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கவோ இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதுதான் மாற்றமா?

ஃப்ளாஷ்பேக்





தென்றல் செல்வராஜ்

பொள்ளாச்சியில் இளைஞர் அணிச் செயலாளராக..

1983-ஆம் ஆண்டு, இளைஞர் அணிச் செயலாளராகத் தளபதியின் முதல் சுற்றுப்பயணம். பொள்ளாச்சி நகருக்கு வருகைதந்தார். வி.எஸ்.ஆர்.ஏ. பள்ளி அருகில், பொதுக்கூட்டம் முடிந்து, அழகாபுரி வீதியில் கழக முன்னோடி அன்வர்பாய் இல்லத்தில் உணவருந்திய பின், வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டிருந்த தலைவரிடம் இளைஞர் அணித் தோழர்கள் புகைப்படம் எடுக்க வந்துநின்றனர். அப்போது, வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிய கையோடு தளபதி எழுந்து நின்றது மறக்க முடியாத நிகழ்ச்சி. படத்தில் மா.உமாபதி, நான் மற்றும் கழகத் தோழர்கள்.

– **'தென்றல்' செல்வராஜ், கழக சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினர், பொள்ளாச்சி, கோவை மாவட்டம்.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

தெரிந்து கொள்வோம்

1.1.1950

கழகத்தின் முதல் மாநில மாநாடு!

முதல் 1951-ஆம் ஆண்டு மே மாதம் வரை 17 மாதங்களில், 12 மாவட்ட மாநாடுகளை நடத்தி முடித்ததற்குப் பின், கழகத்தின் `முதல் மாநில மாநாடு' சென்னையில் 1951-ஆம் ஆண்டு டிசம்பர் 13 முதல் 16 வரை நான்கு நாட்கள் நடைபெற்றது. கலைக்குழு பொறுப்பாளர்களாகக் கலைஞரும் டி.எம்.பார்த்தசாரதியும் செயல்பட்டனர். தமிழ்நாடெங்கும் கண்டன ஊர்வலங்கள், கூட்டங்கள் நடந்தன.



RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900